# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI
## MCOP. No.197/2023
## RW - 1

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : தங்கப்பன் | | : | |
| **Father Name** | : லேட்.கணபதியப்பன் | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th March 2026.)**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணமாக கீழ்க்கண்ட ஆவணத்தை குறியீடு செய்கிறேன்.

1. எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) எ.ம.சா.ஆ.1

மேற்கண்ட சான்றாவணத்தை எனது தரப்பு சான்றாவணமாக ஏற்றுக்கொண்டு மனுவில் கோரிய படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வாகனம் சாலையின் இடது ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். இந்த விபத்து பகல் நேரத்தில் தான் நடந்தது என்றால்

சரிதான். அதனால் அங்கு அக்கம் பக்கம் இருந்தவர்கள் விபத்தை நேரில் பார்த்தார்கள் என்றால் சரிதான்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த விபத்து 17.07.2023ம் தேதி காலை சுமார் 11.30க்கு நடந்தது என்றால் சரிதான். இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட TN 43 D 2669 என்ற மாருதி ஆல்டோ காரின் ஓட்டுநர் மற்றும் அதன் உரிமையாளர் நான்தான் என்றால் சரிதான். விபத்து கோயமுத்துர் – சேலம் செல்லும் நான்கு வழிச்சாலையில்தான் நடந்தது என்றால் சரிதான். நான் எனது காரின் முன் டயரில் சத்தம் வந்தததின் பேரில்தான் காரை ரோட்டின் இடதுபுறமாக நிறுத்தினேன் என்றால் சரிதான், நான் இன்டிகேட்டர் போட்டுதான் நிறுத்தியிருந்தேன். நான் இன்டிகேட்டர் போட்டு காரை நிறுத்தியிருந்தால் அதுபற்றிய விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றும், நான் அவ்வாறு இன்டிகேட்டர் போடாமல் காரை நிறுத்தியதால்தான் அதுபற்றி போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை என் மீதுதான் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கான STC No. 1745/2023 வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்டு நான் அபராதத்தை செலுத்திவிட்டேன் என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு விபத்திற்கு காரணம் நான்தான் என்று சொன்னால் சரியல்ல. எனது காரில் டயரில் மட்டும்தான் சத்தம் வந்துள்ளது என்றும், அதனால் எனது காரை இயக்குவதற்கு எந்த ஒரு பழுதும் ஏற்படவில்லை என்றும், இந்த நிலையில் நான்தான் இன்டிகேட்டர் போடாமல் காரை ரோட்டில் நிறுத்தியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்

மனுதாரர்கள் இந்த மனுக்களில் கோரியுள்ள இழப்பீடுகள் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** :– இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.03.06 09:59:55 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**